

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2026) சென்னை, விக்டோரியா பொது அரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில், நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்று 2025ஆம் ஆண்டிற்கான அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற அப்துல்லா அப்ரித் அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, பயிற்சித் துறைத் தலைவர் ச.கோபால சுந்தர ராஜ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2026) சென்னை, விக்டோரியா பொது அரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில், நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்று 2025ஆம் ஆண்டிற்கான அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் அகில இந்திய அளவில் 2வது இடத்தைப் பெற்ற ராஜேஸ்வரி சுவி அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி.சமயமூர்த்தி பயிற்சித் துறைத் தலைவர் ச.கோபால சுந்தர ராஜ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## உங்கள் கனவு நிறைவேறிவிட்டது!

# இனி மக்களின் கனவுகளை நிறைவேற்றப் பாடுபடுங்கள்!

## அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, மார்ச். 12-**

**அகில இந்திய குடிமைப் பணி தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "உங்கள் கனவு நிறைவேறிவிட்டது; இனி மக்களின் கனவுகளை நிறைவேற்ற பாடுபடுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2026) சென்னை, விக்டோரியா பொது அரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் கலந்துகொண்டு நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய


உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் கடுமையான உழைப்பை கொடுத்து, அதில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய உங்கள் எல்லோருக்கும் முதலில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை இல்லை! இந்தியாவிலேயே ஏன், உலக அளவிலேயே மிகவும் கடினமான தேர்வு என்று UPSC தேர்வைத் தான் சொல்வார்கள். தேர்வுக்கு தயாராகின்ற வர்களின் மன வலிமையையும், டிசிப்ளினை யும் சோதித்து பார்க்கக் கூடிய கடுமையான தேர்வு அந்தத் தேர்வு! அப்படிப்பட்ட தேர்வை, உங்களில் சிலர் முதல் முயற்சியிலேயே தேர்ச்சிப் பெற்றிருப்பீர்கள். சிலர் பல ஆண்டுகளாக முயற்சி செய்து வெற்றியடைந்திருப்பீர்கள். ஆனால், சில ஆண்டு களுக்கு முன்னால், என்ன நிலை இருந்தது என்று எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பல்வேறு முயற்சிகள்!

தமிழ்நாட்டிலிருந்து UPSC தேர்வில் வெற்றியடையும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து கொண்டே வந்தது. நம்முடைய ‘திராவிட மாடல்’ ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பிறகு, இதை கவனித்து, இதை உடனடியாக சரிசெய்ய வேண்டும் என்று அதற்கான பல்வேறு முயற்சிகளை நாம் எடுத்தோம்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2026) சென்னை, விக்டோரியா பொது அரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில், நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்று 2025ஆம் ஆண்டிற்கான அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற 60 வெற்றியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி.சமயமூர்த்தி பயிற்சித் துறைத் தலைவர் ச.கோபால சுந்தர ராஜ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டிற்கு பெருமையைத் தேடித் தாருங்கள்!

நான் முதல்வன் ஊக்கத்தொகை, உயர் பயிற்சி, நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய சிறப்பு பயிற்சி என்று பல்வேறு முன்னெடுப்புகளை நம்முடைய அரசு எடுத்தது. நம்முடைய அரசு எடுத்த முயற்சிகளுக்கு, அண்மைக் காலமாக நல்ல பலன் கிடைத்துக் கொண்டு வருகிறது. இதற்காக உழைத்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியையும், பாராட்டு களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள்தான் Silent Hero's! இந்த ஆண்டு 60 பேர் நம்முடைய மாநிலத்திலிருந்து தேர்வாகியிருக்கிறீர்கள். அதில், 56 பேர் ‘நான் முதல்வன்’ திட்டத்தால் பயனடைந்தவர்கள் என்பதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி! என்னைப் பொறுத்த வரை, இந்த எண்ணிக்கை இன்னும் உயர வேண்டும்.

இங்கு வந்திருக்கக்கூடிய உங்களைப் பார்த்து ரோல் மாடலாக எடுத்துக்கொண்டு இன்னும் பல இளைஞர்கள் தமிழ்நாட்டி லிருந்து இந்தியா முழுவதும் பல மாநிலங்க ளுக்குச் சென்று, பல்வேறு மாவட்டங்களில், கலெக்டராக, பல்வேறு துறைகளில் செயலாளராக, நாட்டின் வளர்ச்சிக்கும் எளிய மக்களுக்கும் பணியாற்ற வேண்டும். ஏன், வெளிநாடுகளுக்கும் இந்தியத் தூதர்களாகச் சென்று, நாடுகளுக்கு இடையிலான நல்லுறவை நீங்கள் மேம்படுத்த வேண்டும்.

### பொறுப்புடையவர்களாக உயர்த்த வேண்டும்!

பொதுவாக, ஆட்சியாளர்களாக இருக்கக்கூடிய நாங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலை சந்தித்து மக்களின் நம்பிக்கையை நாங்கள் பெற வேண்டும். ஆனால், UPSC தேர்வில் வெற்றியடைந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., போன்ற பொறுப்புகளில் அமரும் உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு தேவை அமையவில்லை. 30 ஆண்டுகளுக்கும் மேல் தொடர்ச்சியாக உங்கள் பணியை செய்யக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. இந்த வாய்ப்பு, உங்களை மேலும் பொறுப்புடையவர்களாக உயர்த்த வேண்டும். அடக்கத்தையும், மனிதநேயத்தையும் வளர்க்க வேண்டும்!

அதிகாரிகள் என்றால், அலட்டலாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை, சாதாரண மக்களிடம் கூட அன்பாக, பண்பாக நடந்துகொண்டால் அதுதான் உங்கள் பெயரை காலத்திற்கும் நிலைக்கச் செய்யும்! அப்படி, அன்பும், அடக்கமும், சமூகநீதி பார்வையும் அடிப்படையாக வைத்து இந்தியாவின் ஏற்றத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உழைப்பீர்கள். தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்பான பெருமையைத் தேடித் தருவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இனிமேல், உங்களின் வாழ்க்கை மிகவும் Busyஆக மாறிவிடும். என்னை சுற்றியிருக்கும் IAS Officersயை பாருங்கள்; Officers எல்லோரையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். Rest என்பதே பெரும்பாலும் கிடையாது. அப்படிப்பட்ட Carrierயை தேர்ந்தெடுத்திருக்கும் உங்களுக்கு நான் Personalஆக ஒரு அட்வைஸ் தர நினைப்பது, அதிகாரிகளாக நீங்கள் நாட்டை கவனிக்க வந்துவிட்டாலும், உங்கள் வீட்டையும் குடும்பத்தையும் அதே அக்கறையுடன் நீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

### குடும்பத்திற்கும் சற்று நேரம் ஒதுக்குங்கள்!

எவ்வளவு பிஸியாக இருந்தாலும், உங்கள் அப்பாஅம்மாவிற்கு உங்களுக்கு Life Partner, குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கும் ஒரு 5 நிமிடம் அட்லீஸ்ட் ஒரு ஃபோன்ஆவது செய்து "சாப்பிட்டீர்களா? மருந்து, மாத்திரை எடுத்துக் கொண்டீர்களா?" என்பதை நீங்கள் அக்கறையுடன் கேட்க வேண்டும். இந்த அக்கறையும், அன்பும்தான் உங்கள் Career Developmentஇல் பெரிய துணையாக இருக்கும். இப்போது, உங்கள் கனவு நிறைவேறி விட்டது! இனி மக்களின் கனவுகளை நிறைவேற்ற இன்றிலிருந்து நீங்கள் புறப்படுங்கள்.

**அதிகாரிகள் என்றால், அலட்டலாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை, சாதாரண மக்களிடம் கூட அன்பாக, பண்பாக நடந்துகொண்டால் அதுதான் உங்கள் பெயரை காலத்திற்கும் நிலைக்கச் செய்யும்! அப்படி, அன்பும், அடக்கமும், சமூகநீதி பார்வையும் அடிப்படையாக வைத்து இந்தியாவின் ஏற்றத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உழைப்பீர்கள். தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்பான பெருமையைத் தேடித் தருவீர்கள் என்று நான் நம்புகிறேன்.**

All the Best! உங்களைப் போல இன்னும் பலரை நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு உருவாக்குவதற்கு தொடர்ந்து துணைநிற்கும்!

இந்த நேரத்தில், முக்கியமாக இந்த வெற்றிக்காக கடுமையாக உழைத்த சுதாகரன் அவர்களுக்கு என்னுடைய சிறப்பான பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



## மாநில வளர்ச்சிப் பயணத்தில் யாரையும் பின்தங்க விடமாட்டோம்!